TNMD160000592011

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.107/2011

Deposition of witness for: PW - 11

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணபோஸ் | Father/Husband Name | : முனியாண்டி |
| Age | : | Calling | : காவல் ஆய்வாளர் |
| Date | : 31.08.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 31day of 08.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மதுரை மாவட்ட கீழவளவு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் தொடர் புலன் விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த புலன் விசாரணை அதிகாரியின் கையொப்பம் V.ராமகிருஷ்ணன் என ஆவணங்களில் காணப்படுகிறது. அவருக்கு அரசு தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் விசாரணை மேற்கொண்டபோது V.ராமகிருஷ்ணன் 14.06.2010 முதல் 12.01.2012 வரை மேலூர் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்ததாகவும் மேற்படி ஆவணங்களில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் வழக்கானது கடந்த 2009ம் வருடம் என்பதால் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு

தற்போதுள்ள காவல்நிலைய பொறுப்பு அலுவலரை மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க குவிமுச பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. ஆவணங்கள் அடிப்படையில் சின்னன் மற்றும் மாரீஸ்வரி ஆகியோர்களை விசாரித்து 20.05.2010ல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.